[1986 நவம்பர் 20

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, திருச்சி மத்திய மண்டலமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 9-30]

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் உள்ள வடக்கு மண்டல அலுவலகத்தை சென்னைக்கு மாற்றமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். இங்கே சென்னையிலே நமக்குச் சொந்தமான பெரிய கட்டடம் இருக்கிறது. அதிலே அந்த அலுவலகத்தை வைத்துக்கொள்ள லாம். மேலும் தொழிலாளர்களை இங்கே இருந்து மாற்ற வேண்டியதில்லை. ஆகவே வேலூரிலிருந்து சென்னைக்கு அந்த அலுவலகத்தை மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலிருந்து அதை சென்னைக்கு மாற்றுகிற உத்தேசம் இல்லை. அப்படி பிரிவுகள் இருந்தால் தான் வேலைகள் சுமுகமாக நடைபெறும் என்பது தான் நடைமுறை சாத்தியக்கூறாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் கொல்லன் விளையில்.
விளையாட்டு அரங்கம்.

103—(*வினா எண் 4505) திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் நகராட்சிக் குட்பட்ட கொல்லன்விளையில் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் உடனடியாக விளையாட்டரங்கம் கட்டுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1986 நவம்பர் 20]

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கொல்லன் விளையில் ஒரு ஸ்டேடியம் அமைக்கப்படவேண்டுமென்பதற்காக ஒரு இடத்தை ஆர்ஜிதம் செய்து இது ஸ்டேடியத்திற்கான இடம் என்று நகராட்சியால் ஒரு பெயர்ப்பலகை வைக்கப்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் அது பிரச்சினையாக எழுப்பப்பட்டு பிறகு அது ஏற்கப்பட்டு அங்கேயிருந்து அரசுக்குக் கருத்துரை வழங்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் அந்த செயற்குறிப்பு இல்லை என்பதைத் தான் சொன்னேன். அங்கே உள்ள 2·6 ஏக்கர் நிலத்தை—பாம்பாட்டுக் குளத்தின் பகுதியில் எடுத்து விளையாட்டு மைதானம் கட்டுவதற்காக அந்த நிலம் கையகப்படுத்தப்படுகின்ற நிலை இருக்கிறது. இன்னும் பொதுப் பணித்துறை அந்த நிலத்தை ஒப்படைக்கவில்லை. கோட்டாட்சித் தலைவர் அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறார். அரசு அவருக்கு இது குறித்து தாக்கீது கொடுத்து துரிதப்படுத்தச் சொல்லும்.

திருச்சி மாவட்டத்தில் சுயநிதி பாலிடெக்னிக்குகள்.

104—(*வினா எண் 5152) திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் துவக்கப்பட்ட சுயநிதி பாலிடெக்னிக்குகள் எத்தனை?

(ஆ) அனுமதி வழங்கப்பட்ட இப்பாலிடெக்னிக்குகளில் போதிய வசதிகள் இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நான்கு

1. கரூர் பாலிடெக்னிக், கரூர்.

2. தந்தை ரோவர் இன்ஸ்டிட்யூட் பாலிடெக்னிக், பெரம்பலூர்.

3. முகமது கல்வி மற்றும் பல்தொழில் நுட்பப் பயிலகம், திருச்சி.

4. திருமதி எலிசபெத் பாலிடெக்னிக், திருச்சி.

(ஆ) இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS